உ

சிவமயம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

# திரு. வீ. மு. கந்தையாபிள்ளை

(மில்க்வைற் சோப் தொழிற்சாலைத் தாபகர்)

அவர்களின்

# 52 ஆவது ஆண்டு மலர்

*வெளியிடுவோர் :*

**சிவநேயர் இ. தவகோபால் J. P**

அதிபர்,

மில்க்வைற் சோப் தொழிலகம்,

த.பெ. இல 77, யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

**திரு. வீ. மு. கந்தையாபிள்ளை**

(மில்க்வைற் சோப் தொழிற்சாலைத் தாபகர்)

சிறந்த பொதுநல ஊழியரும்
யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் தொழிற்சாலையின்
ஆரம்ப கர்த்தாவுமாகிய

# உயர்திரு. மூ. கந்தையாபிள்ளை

அவர்களைக் குறித்து

## இணுவில் ந. சோமசுந்தரம்

அவர்களால் எழுதப்பெற்றது

நாடா வளந்தருவது நாடு என்றும் அத்தகைய வளம் படைத்த நாட்டிற்கு தண்ணொளி படைத்த தக்கோரும் ஊருணி போன்ற உளம் படைத்த உத்தமச் செல்வரும். நாட்டின் ஜீவநாடியாவர் என்றும் கூறினார். வள்ளுவனார். நாட்டின் வாழ்வு, நாட்டின் நலம், நாட்டின் ஏற்றம், நாட்டின் உயர்வு ; அத்தனையும் ஆங்கு வாழ்வு நடாத்தும் நல்லவர்களில்தான் தங்கியிருக்கிறது என்பது அறிஞர்கள் கருத்து. பொருளாதாரத்துறையில், கைத் தொழில் முன்னேற்றத் துறையில்தான் ஓர் நாட்டின் உயர்வைக் காணமுடியுமென்றால் அத்துறையில் உழைத்திட்ட பெரியோர் களை நாம் மறக்க முடியுமா?

யாழ்நகர் - வண்ணார்பண்ணை புகழ்பூத்த பொன்னகம். புகழ்படைத்த இவ்விடத்தில் பெருமையுடைத்த பரம்பரையில் இல்லறமே நல்லற மென்பதற்கிணங்க இசை படைத்த வாழ்வு நடாத்திய பெரியார் வீரகத்திப்பிள்ளை முருகேசு பிள்ளைக்கும் மனையாள் வள்ளியம்மைக்கும்,

**'பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட் பேறுஅல்ல பிற'**

என்ற குறளுக்கிணங்க நல் மகனாம் திரு. கந்தையாபிள்ளை உதயமானார். வாழும் பிள்ளையை மண் விளையாட்டிலே ; வளரும் பயிரை முளையிலே தெரியுமென்பார்களே! அதேபோல் கந்தையாபிள்ளை யவர்களின் குழந்தைப் பருவத்தைக் கண்ணுற்ற பெரியோர்கள் உன்னத நிலைக்கு உயருவார் என்று பேசிக்கொண்டனர்.

துள்ளி விளையாடிய பருவம்போய் பள்ளி வாழ்வில் புகுந்திட்ட பிள்ளையவர்கள் கல்வியில் நாட்டமுடையவராய்க் காணப்பட்டதுடன் படிப்படியாக மேல் வகுப்பிற்கு உயர்த்தப் பட்டார். பள்ளி வாழ்விலே செம்மையுடைத்தராய்க் காணப்பட்ட கந்தையாபிள்ளை அவர்கள் வாழ்விலே ஒளியுடைத்தவராவார் என்பது திண்ணம் என்று ஆசிரியர்கள் சொல்லிவைத்தார்கள்.

பள்ளி வாழ்வை முடித்துக்கொண்டு இவர் வாழ்வுப் பாதையை புதியதோர் திருப்பு முனைக்கு இட்டுச்செல்ல எண்ணினார். ஆற்றங்கரை மரமும், அரச வாழ்வும் வானத்துவில் என எண்ணினார். புதியதொரு வாழ்வைக் காணவேண்டும். புதியதொரு திருப்பத்தைத் தமிழ் நாட்டில் காணவேண்டும். அதனால் நாடு ஏற்றம் அடையவேண்டும் மென்று எண்ணினார். ஒரு நாட்டின் முன்னேற்றம் தொழிலின் வளர்ச்சியில்தான் தங்கியிருக்கிறதென்பதை உணர்ந்திருந்தார். பெரியார் பிள்ளை யவர்கள். சிந்தனையை வலுப்படுத்தி. புதியதோர் வழியைக் காண எண்ணினார். தனிமையை நாடிப், பிள்ளையவர்கள் சிந்திக்கத்தொடங்கினார்கள்.

**'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே**
**யந்திரங்கள் வகுத்திடு வீரே'**

என்ற கவிஞர் முரசும் சிந்தனைக்கு விருந்தளித்தது. சுதேசி இயக்கம் இந்திய மண்ணில் உருவெடுத்து கனியாவதைத் தெரிந்திருந்தார். சுதேசிய கப்பல் என்ற அழைப்பை ஏற்படுத்திய செந்தமிழ் வீரர்சிதம்பரப்பிள்ளையின் கடமையுணர்ச்சியை எண்ணினார். ஒருநாள் மாலை நேரம் சிந்தனைக்கு முடிவு கட்டும் நிலை.

**'சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு**
**தாழ்ச்சியுள் தங்குதல் தீது'**

என்றபடி அவரின் எண்ணச் சிந்தனை எண்ணித் துணிந்த ஓர் முடிவாகியது. சொந்த முறையிலே ஓர் தொழிற்சாலையை அமைக்க வேண்டும். அதன்மூலம் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் தொழிலாளர்கட்கு வேலை சுதேசி இயக்கம் அத்தனையும் பரிபூரணமாகும் என்பதே.

1920 ஆம் ஆண்டு மில்க்வைற சோப் தொழிற்சாலை உதயமாயிற்று. வேலை நடந்தது. "வள்ளுவர் நெய் தொழில். அத்தொழில் நெய்யுந் தொழிற்குண்டாமோ நேர்" என்று போற்றப் பட்ட தொழில் மூலம் பெற்றிட்டதுணிகளை துவைப்பதற்கு கிடைத்தது. மில்க்வைற் சோப். (Milk White Soap) தொழிற் சாலையில் உதயமாக சவர்க்காரம் உண்மைச் சரக்காகவே இருந்தது. விடா முயற்சியும். தளராத சிந்தனையும் தொழிற் சாலைக்கு உரமாயின.

ஊக்கமெனும் வித்திட்டு. தொழிற்சாலையை வளர்த்த போதிலும் தமிழகத்தில் வரவேற்புக் கிடைக்கவில்லை. உலக வரலாறு காட்டும் பாடத்தைத் தமிழ்நாடும் காட்டியது. இரத்தத்தை வியர்வையாக்கி. செந்நீரைக் கண்ணீராக்கி. வறுமையைத் தோழமையாக்கி வாழ்வு நடாத்தும் கைத்தறி நெசவாளிகளின் கண்ணீரைத் துடைக்கவில்லை. இன்று தமிழகம் - ஆலைத்துணியை அரவணைக்கும் தாயகத்தோர்போல ஈழத்த வரும் இட்ட வரவேற்பு இறக்குமதிச் சரக்கிற்கே மதிப்பளித்தனர். கனியிருக்க காய் கவர்ந்ததுபோல் சுதேசிய தொழிற்சாலையின் மில்க்வைற் சோப்பைவிட்டு அந்நிய சோப்பை அணைத்துக் கொண்டனர்.

1920 ஆம் ஆண்டு தொடங்கிய தொழிற்சாலையின் வளர்ச்சி நிலைக்கேற்ற வளர்ச்சியையோ நினைப்புக்கேற்ற வளர்ச்சியையோ அடையவில்லை. மக்கள் தமிழ் நாட்டுப் பொருளை. பொருளின் தரத்தை மதிக்க ஆதரிக்க. கைலாகு கொடுக்க முன்வரவில்லை. தமிழ்நாட்டிலே ஓர் தொழிற்சாலை இயங்கவேண்டும். மக்கள் சுதேசியப் பொருளை வாங்குவதன் மூலம் சுதந்திர உணர்ச்சியை பெறட்டும் என்ற உயர் நோக்கு டைத்த உத்தமராம் கந்தையாபிள்ளையின் தீர்க்க தரிசனத் தைத் தமிழகம் ஏற்க மறுத்தது. இதனால் தளர்ந்துவிடவில்லை திரு. கந்தையாபிள்ளை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பன வெற்றியை அளிக்கும் என்பது அவரது நம்பிக்கை. ஆம் அவரது நம்பிக்கை வீண்போக வில்லை. ஊக்கத்தால் உயர்ந்தவர்களது பட்டியல் கந்தையாபிள்ளையின் உள்ளத்தில் உருவகமாகியது.

"ஊழையும் உப்பக் காண்பர் உழைவின்றி ஞாழாது பயற்றுவர்" என்றார் வள்ளுவப் பெரியார். ஆம் கந்தையா பிள்ளையவர்களும் குறளின் கருத்தை மெய்ப்படுத்தினார். காலம் உருண்டது. வெற்றியும் கிடைத்தது. ஒன்றாய், பலவாய், ஆயிரமாய், இலட்சமாய் தொழிற்சாலையில் சவர்க்காரம் உற்பத்தி செய்யவேண்டி இருந்தது. தமிழகத்து வீடுகள் தோறும் பவனி வந்தான் சோப் வீரன் - மில்க்வைற். சுதேசிய சோப்பாம், மில்வைற் இன்றேல் சுபீட்சம் இல்லை, என்ற நிலை நாட்டில் ஏற்பட்டது. இந்நிலை கண்டார், களிப்புக்கொண்டார் உயர்திரு. கந்தையாபிள்ளை. இன்று தமிழகமாம் ஈழத் திருநாட்டில் மில்க்வைற் சோப் நிலையான இடத்தைப் பெற்று விட்டது. கடைகளில் பார்த்தால் மில்க்வைற் சோப். வீடுகளில் துணிகள் துவைக்கும் இடங்களில் மில்க்வைற் சோப். இத்தனைக்கும் காரணம் கந்தையாபிள்ளையே. எழுத்தறி வித்தவன் இறைவனாவான். ஈழத்தில் சோப் தந்தோன் எம் கந்தையாபிள்ளை அவர்களல்லவா? கந்தையானாலும் கசக்கிக் கட்டுவதற்கு மில்க்வைற் சோப் மிகவும் தேவையான தென்பதை மக்கள் தெரிந்துகொண்டார்கள். குறைந்த விலையில் சிறந்த சரக்காக, கிடைக்கப்பெறும் மில்க்வைற் சோப் தமிழ்நாடு பூராவும், தமிழர்கள் இல்லங்கள் தோறும், தழுவிக்கொள்கிறது. அரைத்தால் சந்தனம் மணக்கு மென்பார்கள் தேய்த்தால் மில்க் வைற் திறமையை நாடு காண்கிறது. நாமும் காண்கிறோம். திறம் சரக்கிற்கு விளம்பரம் வேண்டுமா? (Good wine need no bush) இல்லவே இல்லை.

விளம்பரமின்றி இலட்சக்கணக்கில் வியாபாரமாகிறது இன்று. மில்க்வைற் சோப் இத்தகைய உயர்விற்கும், வரவேற்புக் கும் காரணம் திரு. கந்தையாபிள்ளை அவர்களே. நல்லவர் களால் நாடு நலம் பெறுகிறதென்றால், கலைஞர்களால் கலை பெருமையடைகிறதென்றால், கலைஞர் திருவாவடுதுறை இரா சரத்தினத்தால்நாதஸ்வரவாத்தியம் பெருமையடைந்த தென்றால் யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப்பினால் தமிழகம் பெருமை பெறுகிறதென்றால் அச்சோப் தொழிற்சாலையை ஆரம்பித்த

திரு. கந்தையாபிள்ளைக்கே அப்பெருமை சேர்கிறதல்வா? எனவே தான் அன்னாரின் வாழ்வுப் பெருங்காப்பியத்தில் சற்று நாம் நுழைந்தாக வேண்டியிருக்கிறது.

மணவாழ்க்கை மாண்புடைத்த வாழ்வென்பதற்கேற்ப. திரு. மு. கந்தையா பிள்ளையை இல்லற வாழ்விற்கு புகுத்த எண்ணினார் அன்னாரது தந்தையார் முருகேசபிள்ளையவர்கள் தந்தை சொல் மிக்க மந்திரமில்லையென்றால் அச் சொற்கேற்ப கந்தையாபிள்ளை அவர்களும் தந்தையார் வேண்டுகோளின்படி நாளது திங்கள் ஆண்டு 1922 திரு. சண்முகம் செல்லப்பிள்ளை மகளை,

**சாந்த மூழ்கு தடம்புயன் ஆரழற்**
**கேய்ந்த யாவும் இனிது முடித்தபின்**
**ஆய்ந்த நான் மறையின் வழி ஆயிழை**
**காந்தண் மென்விரல் கைப்பிடித்தனரே.**

**(நைடதம், மணம்புரிகாண்டம்)**

என்பதற் கிணங்க கற்பெனும் பொற்பணி பூண்ட பூம்புகார் செல்வி கண்ணகி போன்ற மனையாளைக் கைப்பிடித்திட்டார்.

தமிழும் சுவையும் போலும், யாழும் இனிமையும் போலும், தேனு ் சுவையும் போலும், இல்லற வாழ்வில் மனையாளுடன் இன்பநடு ய்ந்திட வாழ்ந்திட்டார். அன்பு அறனும் உடைத் தாயின் இல்வாழ்க்கை, பண்பிலே பயனுறத் தவழ்ந்து இல்வாழ் வின் கருவூலமாம் மக்கட் பேற்றினை அடையுமென்பார்கள். ஆம் குடும்ப வாழ்விலே குதூகலத்தை, இல்லற வாழ்விலே இன்பத்தை, நாளாந்தர வாழ்விலே, பொழிலிடை மேவிய புனலிடை மூழ்கிய பேரின்பத்தை வாழ்வுப் பாதையில் பெற்றிட்ட பிள்ளையவர்கள் மனையாளின்.

**'ஓவியர்நீள் சுவரெழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்**
**தேவியையாழ் அழைத்திட ஆண் சித்திரமேல் நான்பாரேன்**
**பாவையர்தம் உருவமெனில்நீர்பார்க்க மனம் பொறேனென்றாள்**
**காவிவிழி மங்கையிவள் கற்புவெற்பின் வற்புளதால்'**

அறிஞர் வேதநாயகம் பிள்ளையவர்கள் போற்றும் கற்புத் திறனைப் பெற்றிட்ட அப்பெருமாட்டியின்பால் பேரன்பு கொண்டிருந்தார். வாழ்வில் வளம் காண்பதென்றால் மக்கட் செல்வத்தினால்தான் வளத்தைக் காணமுடியும் என்பார்கள். திரு. கந்தையாபிள்ளை மக்கட் செல்வத்தையும் காண்பதற்கு கொடுத்து வைத்திருக்கிறார்கள். குழலும், யாழும் குழையுமள விற்கு மழலை மொழிபேசி மயக்கிடும் மக்களாம், இரத்தின கோபால், கனகராசா, லோகநாதன், வவநாதன், சபாரத்தினம், லோகேஸ்வரி, தனலக்சுமி அத்தனை பேரையும் பெற்றிட்டு மகிழ்ந்தார்கள் கந்தையாபிள்ளை தம்பதிகள் உரிய காலத்தில் தம் கடமைகளைக் குழந்தைகளுக்குச் செய்வதிலும் இலக்கி யத்தை ஊட்டு வதிலும் கந்தையாபிள்ளை அவர்கள் முன்னின்றார்.

**..... இடை பட**
**குறு குறு நடந்துசிறுகை நீட்டி**
**இட்டுந் தொட்டும் கௌவியும் துளந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்ல தாம்வாழுநாளே**

என்ற புற நானூற்றுச் செய்யுள் கூறும் இன்பத்தைப் பிள்ளை களைப் பெற்றதனால் அடைந்தார்.

உரிய காலத்தில் கல்வியளித்தும், சீரிய வாழ்விற் கேற்றநல் நடை நல்கலும் தந்தையின் கடன் என்பதை நிரு பித்துக் காட்டுவதுபோல் தாம் பெற்றிட்ட மக்களைக் கல்வி யறிவுள்ளவர் களாகச் செய்து உயர் வழிக்குக் கொணர்ந்தார்.

**'தந்தைமகற் காற்றுமுதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல்எனும் சொல்'**

என்பதற்கிணங்க, தம் மக்கள் சீரிய வாழ்வு வாழ்வதையும் தந்தையின் வழி நடத்தலையும், உயர்ந்த பதவிகளை வகிப்பதையும் தம் வாழ்நாளிலே கண்டு களிப்பெய்தினார்.

குடும்ப வாழ்வில் அன்பு நெறியைச் சொரிந்திட்ட பிள்ளையவர்கள், பொது வாழ்விலும் ஈடுபட்டார். சக்திக்கு மேற் கொண்டு பொது விடயங்களில் ஈடுபட்டார் என்றால் நாம் அவரைப் போற்றாதிருக்க முடியுமா? எனது நாடு, எனது மொழி, எமது இனம் என்று கூறுவதுடன் தாய் நாட்டுப் பாசம் (Patriotism) உடைத்தவன் தான் வாழும் தகுதியுடையவனா வான். அறம், பொருள், இன்பமென்ற மூவகை படிவங்களில் குடும்பம், நாடு சேவை அடங்குகின்றன. தாய் நாட்டைப் பற்றி, தாய்நாட்டின் வாழ்வுபற்றி நினைக்காதவனைப் பற்றி கவிஞர் ஸ்கொற் (Walter Scott)

"Lives there the man with soul so dead
Who never to them self hath said
The is my native land

கூறுகிறாரே' இந்த கவியின் அடிகளுக்கு சாவுமணி அடிப்பது போல் பொதுவாழ்வில் தமிழ் நாட்டை இவர் மறந்துவிடவில்லை.

தமது வாழ்நாளில் தமிழ் நாடு சுதந்திர நாடாகி தமிழ் அரசின் கீழ் வாழ்வதை தமிழ்க்கொடி பட்டொளி வீசிப்பறந்திடும் காட்சியைகாணும் ஆசையுடைத்தவராயிருந்தார். அதேபோன்று சுற்றத்தவர்கள் வாழவேண்டும். சீரிய வாழ்வு வாழ்வுற வேண்டு மென்று ஆசைப்பட்டார். இந்நாட்டில் ஏழைகள், அடிமைகள், எத்தர்கள் இருக்கக்கூடாது. தமிழர்கள் யாவரும் ஒன்றே குலத்தவர் என்ற பரந்தநோக்கு அவர் உள்ளத்தில் எழில் விட்டதுடன் வாழ்வில் செய்கையிலும் காண்பித்தார்.

தமிழ்நாடுதோறும், கல்விச்சாலைகள், கலை மன்றங்கள் பெருகி விடவேண்டும். கற்றவர்களேயன்றி, மற்றவர்கள் இல்லா மலும், சாதிக்கொடுமை சரிந்து, சாந்தமும் இன்பமும் கடலா விடும் இன்ப வாழ்வைக் காணவும் வேண்டுவான் கருதி உழைத்திட்டார்.

பயிலுறும் அண்ணன் தம்பி - அக்கம்
பக்கத் துறவின் முறையார்
தயைமிக உடையாள் அன்னை - என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை
குயில் போற் பேசிடும் மனையாள் - அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை
அயலவ ராகும் வண்ணம் - தமிழ் என்
அறிவினில் உறைதல் கண்டீர்

என்ற கவிக்குயில் பாரதிதாசனது பாட்டிற்கு ஓர் எடுத்துக் காட்டாக அவர் வாழ்வு இருந்தது. திரு கந்தையாபிள்ளையின் வாழ்வில் பங்குகொண்டோர்க்கே இவ்வுண்மை நன்கு விளங்கும். பேருக்காகவோ, புகழுக்காகவோ, திரு. மு. கந்தையாபிள்ளை வாழவுமில்லை; அவரைப்பற்றி இங்கு குறிப்பிடும் கருத்துக் களும் வேண்டுமென்று எழுதப்பட்டனவல்ல. மற்றவர்கள் காண வேண்டுமென்றோ, தம்மை அறிந்து போற்ற வேண்டு மென்றோ இவர் விரும்பியிருந்தால்? இவர் இத்தகைய எண்ணத்தை யுடையவரல்ல.

சென்னைக் கடற்கரையில் பொதுவுடமைச் சிந்து பாடித் திரிந்த செந்தமிழர் சிங்கார வேலனாரைத் தமிழகம்தெரியுமா?

**அலைமா கடல் நிலம் வானில் - நின்**
**அணிமாளிகை ரதமே**
**அவை மேவிடும் விதமே**
**நின் அதிகாரம் நிறுவுவாய்**

என்பதைக் காட்டிய தமிழ்நாடு தொழில் மன்னர் திரு. ஜி.டி. நாயுடு வைத் தமிழகம் நன்கு புரிந்துகொண்டுதான் இருக்கிறதா? இல்லவே இல்லை. நிலை இப்படி இருக்க இலைமறை காய் போல் இருந்து சேவை செய்திட்ட கந்தையாபிள்ளையவர்களை நாடு அறியுமா?

ஏழை மக்களுக்கு அவர் வாரி வழங்கினார். பல இளைஞர் களுக்கு கல்வி பயில வசதிசெய்து கொடுத்தார். சுற்றத்தவர் களுக்கும் மற்றவர்களுக்கும் அன்னார் செய்துள்ள சேவைகள் என்றென்றும் பொன்போற் பொதிந்து போற்றப்படக் கூடிய தல்லவா? திரு. மு. கந்தையாவின் தியாகச் சிந்தை, கடமை யுணர்ச்சி, புகழ், பெருமை அத்தனையும் எம்செவிக்கு எட்டிய போது, எல்லாவற்றிற்கும் மேலாக "மில்க்வைற் சோப் தொழிற் சாலையை" பார்வையிட வேண்டுமென்ற ஆசை தூண்டியபோது அங்கு சென்றிட வேண்டுமென்ற முடிவிற்கு வந்ததால் ஓர் நாள் தொழிற்சாலை அலுவலகத்தில் வேலை பார்க்கும் தோழர் நடராசனுடன் சென்றிருந்தோம். கண்ணுக் கெட்டிய தூரத்தில் தொழிற்சாலையின் அலுவலகம் தென்பட்டது. அலுவலகத்தை இப்பொழுது அண்மித்துவிட்டோம். அலுவலக மேசை, அலு வலகக் குறிப்புகள் கொண்ட பைல்கள், புத்தகக் கட்டுகள், இன்னோரன்ன அலுவலகத் தொடர்பு கொண்ட பொருட்கள் அங்குகாண நாற்காலியில் ஓர் உருவம் தன்னையே மறந்து வேலையில் ஈடுபட்டிருந்தது. வயதேறிய அவ்வுருவம் தளர்ந் திருக்கவில்லை. மணிக்கூண்டுபோல கடமையைச் செய்து கொண்டிருக்க என் உள்ளம் அவரைப்பற்றிச் சிந்திக்கத் தொடங் கியது. தொழில் மன்னர் ஜி.டி. நாயுடுவை, சுதேசிக் கப்பல் மன்றமமைத்த வ. உ. சிதம்பரநாரை? ஓடும் புகை வண்டியைக் கண்ட ஸ்டிபன்சனை காண்பது போன்ற உணர்ச்சி என் உள்ளத் தில் உதயமானது. அவரைப் பற்றி அறிந்தவைகள் அத்தனையும் உண்மையென்ற உறுதி உள்ளத்தில் பிறந்தது.

"வணக்கம் வருக" என அலுவலகத்தில் தொங்கிய போட் எம்மை அழைத்தது. பெரியார் கந்தையாபிள்ளை எழுந்து கை கூப்பி வணக்கம் தெரிவித்து தம்பி வா' உட்கார் என நாற் காலியை இட்டார். பாச அந்த அன்பு அழைப்பில் பொதிந்து கிடந்தது. உள்ளம் சிலிர்க்க, உடல் சிலிர்க்க அன்னாரை வணங் கினேன். மில்க்வைற் சோப்பின் எழில்போல கந்தையா பிள்ளையும் எழிலாகப் பேசினார்.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா - உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்'

என்றாரே வள்ளுவனார். இக்குறளில் தான் படிந்திருக்கும் உண்மைதான் என்னே. பல நாட் பழகியவர்கள் போல் ஒரு சில நிமிடங்களில் ஆனோம். தொழிற்சாலையின், ஆரம்பம், மத்திய கால நிலை இன்று தமிழ் நாட்டில் மில்க்வைற் சோப்பிற்குக் கிடைக்கும் அமோக வரவேற்பிற்குக் காரணம் இவைகளைப் பற்றி அவருடன் கலந்துரையாடினேன். அன்னாரின் பேச்சி லிருந்து அவரது உள்ளக் கிடக்கையை நான் கண்டேன். பொது வாழ்வில் அவர் கொண்ட பங்கு, ஏழை மக்கள்பால் கொண்டுள்ள இரக்க சிந்தை சாதிக் கொடுமையை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணம், மேலாக தமிழ்நாடு உலகோடு தலை தூக்கிச் சமமாக நிலைபெற்று வாழவேண்டுமென்ற இதய ஆசை என்னும் அவர் கொண்டுள்ள பல்வேறு எண்ணங்களை அவர்களது பேச்சி லிருந்து காணக்கூடியதாக இருந்தது.

தொழிற்சாலைகளைக் கண்டவர்களை, தொழில் இயந்திரங்களை செய்தவர்களை, வானவூர்தியைக்கண்டவரை, அலை கடலைக் கிழித்துச் செல்லும் கப்பலைச் செய்தவர்களை, நெய்தற் தொழிலைச் செய்வோரை நாம் போற்றுகின்றோம். அமெரிக்கா நாட்டிலே, இங்கிலாந்திலே, இரஸ்சியாவிலே சாதாரண ஓர் தொழிலாளிகூடப் போற்றப்படுகிறான் என்றால் தனி மனிதராக யாழ்ப்பாணத்திற்கே பெருமை தேடித்தருமள விற்கு "மில்க்வைற் சோப்" தொழிற்சாலையை நிறுவி அதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்திட்ட பெரியாரை ஏன் தமிழ்நாடு போற்றக்கூடாது என்ற எண்ணம் என் மனதில் ஒருகணம் தோன்றி மறைந்தது. அரசாங்கமே பல தொழிற் சாலைகளுக்கு மூடுவிழாச் செய்யும் இக்காலத்தில் மில்க்வைற் சோப் தொழிற்சாலை நாடு பூராகவும் சோப்பை வழங்குவதன் மூலம் வெற்றிவிழாக் கொண்டாடுகிறது.

இத்தகைய எண்ணங்கள் எண்ணத்தில் திரையிடவும் அவருடன் பேசிக்கொண்டே இருக்கவும் நான் ஓர் காட்சியைக் காண நேரிட்டது. திரு. கந்தையாபிள்ளை அவர்களின் கொடை ஓர் எடுத்துக்காட்டாக.

வறுமைப் பிணியால் வாடிய ஓர் தமிழ்ப்பெண் அலுவலக முன்றிலில் வாடிய உடலினளாய் ; வறண்ட தலையினளாய் ; சோர்ந்த முகத்தினளாய் இருந்தாள்.

'பசந்த மேனியொடு படர் அடவருந்தி
மருங்கில் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்து தின வாடிய முலையள்
பெரிது அழிந்து குப்பைக் கீரை
கொய் கண் அகைத்த'

என்று வரும் புற நானூற்றடிகளில் புலவர் பெருஞ்சித்திரனார் சித்தரிக்கும் காட்சியைக் கண்டார் பெரியார் கந்தையாபிள்ளை. ஏழைகளுக்காக இதயத்தை அளிக்கின்றவர்களே வாழத் தகுதி யுடைத்தவர்கள் என்றாரே சுவாமி விவேகானந்தர். ஆம் ஏழை களுக்காகவே மனிதர்கள் வாழவேண்டும். இக்கருத்துக் கொண்டவர்தான் இவர். பிச்சைக்காக வந்த அவளின் சோகக் கதையைக் கேட்டார். கண்ணீர் விட்டார். முல்லைக்கொடி படரமுடி மன்னர் பாரி தேரை ஈந்தான் ; குளிரால் வாடிய தோகை மயிலுக்கு போர்வையை இட்டான் பேகன் ; செய்த குற்றத்திற்காக தனது கையை வெட்டினான் கொற்கைப் பாண்டியன். இவர்கள் பரம்பரையினராகிய நாம் ஏழ்மையில் வாழ்கிறோமே. ஏழ்மைச் சின்னங்களை, நாட்டிலே காண் கிறோமே என்ற சோகம் அவரை வாட்டியது போலும். குமணனும் பாரியும் செய்தார்களே அந்தமாதிரி வாரி வழங்கினார் ஏழைத் தமிழ்ப் பெண்ணின் உள்ளம் குளிர திரு.கந்தையாப்பிள்ளை கண்களில் ஒளிவிட கனிந்த பார்வையின் மூலம் தனது மரியாதையைச் செலுத்திச் சென்றாள். இச் செயலின் மூலம் இவரின் கொடைத்திறனை நாம் காண்கிறோம்.

பின்னர் தொழிற்சாலையை நாம் பார்த்தோம். மில்க்வைற் சோப் செய்யப்படும் விதத்தை அங்கு கண்டோம். பாணி சேர்க்கப்படும் விதம், பின் அது உறைய வைக்கப்படும் பகுதி உறைந்திட்ட பாணியை கட்டியாக்கும் முறை, கட்டியானது

"பாக்" செய்யப்படும் விதம் ஆகியவற்றை விளக்கினார். அங்கு முக்கிய பகுதியில் வேலை செய்யும் தோழர் மாணிக்கம். தோழர் நடராசனும் தொழிலாளர்களில் அதிமுக்கியமானவராகத் தென் பட்டார். 1920 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தொழிற் பயிற்சியின் விசித்திரத்தைக் கூறிக்கொண்டிருந்தார். பைசிக்கிள் வண்டிமூலம் மாட்டுவண்டி மூலம் விற்றுவந்த ஆரம்ப காலத்தில் லாபமின்றி இருந்தும் தொழிற்சாலை ஒன்று நம் நாட்டுக்குத் தேவை என்றதை உணர்ந்தே தாம் பல கஷ்டங்கள் இன்னல் களுக்கு உள்ளானபோதும் உறுதியாக இருந்ததால் தான் இன்று இந்தநிலைக்கு தொழிற்சாலை கொண்டுவரப்பட்டுள்ளது என்றார்.

இக்கட்டத்தில் மில்க்வைற் சோப் தொழிற்சாலையில் முக்கிய பொறுப்பாளராகவும் உரிமையாளராகவும் இருந்த திரு. க. கனகராசா வந்தார். பரந்த முகத்திலே விளையாடும் களை இளநகை சொரியும் வதனம், உறுதியான உடம்பு, முயற்சியும் உறுதியும் கொண்ட இதயம், ஒரு மேல்நாட்டுத் தொழிலதிபர் போல் இருப்பதைக் காட்டிற்று. வணக்கம் கூறி எம்மிடம் பேசினார். அவரது உள்ளக் கிடக்கைகளை மனம் விட்டுப் பேசினார்.

யாழ்ப்பாணத்திலே தொழிற்சாலைகள் காண்பதரிது. தமிழ் மக்களது இயக்கமாகக் காண்பதென்றால் சொல்ல முடியாது. இந்நிலையில் வெளிநாட்டு இறக்குமதிச் சோப்பின் தரத்தை, இறக்கக்கூடிய அளவிலே மில்க்வைற் சோப் இருக்க இத் தொழிற்சாலையை நல்லமுறையில் அமைத்து திறம்பட நிர்வகித்து தமிழ்ப் பகுதிகள் பூராவும் விநியோகம் செய்து தமிழ் மக்களது மகத்தான அன்பைப் பெற்று இயங்கும் இத் தொழிற்சாலையையும், இதை ஆரம்பித்த திரு. மு. கந்தையா பிள்ளை அவர்களையும் தமிழகம் மறக்குமா?

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தத்துவத்துடன் வாழ்ந்த இப்பெரியார் 11.04.59 இல் இயற்கை எய்தினார் என்ற சோகச் செய்தி ஈழத் தமிழகத்திற்கோர் சோகக் காப்பியமானது. பிறந்

தவர்கள் இறப்பது உலக இயற்கை என்பதால் இறந்த இப் பெரியாரை மறவாது போற்றுவதுடன் அன்னார் விட்டுச் சென்ற பணிக்கு நாம் ஆதரவளிப்பதால் எமது கடமையைச் செய்யக் கூடியவர்களாகிறோம். அன்னாரது புகழ்பரவ வழி செய்வதானால் அவர் முயற்சியின் பேரிலே நிறுவப்பட்ட தொழிற்சாலையின் மில்க்வைற் சோப்பை ஆதரிப்போமாக.

தமிழ்நாட்டின் முன்னேற்றம் கருதி உழைத்திட்ட தந்தை யாரின் தன்மை எப்படியோ அதேபோன்று மகனார் திரு. கனக ராசா ஒழுகிவந்துள்ளார். திரு.கந்தையாபிள்ளை அவர்களது

**எந்நரும் தமிழ்நாட்டின் கண்**
**எல்லோரும் கல்விகற்று**
**பன்னரும் கலைஞானத்தால் அன்பால்**
**உன்னத இமயம்போல் ஓங்கிடும் கீர்த்தி யெய்தி**
**இன்புற்றார் என்று மற்றோர்**
**இயம்பக் கேட்டிடல் எந்நாளோ.**

மேற்படி பாட்டின் குரலே இதயகீதமாக இருந்ததுபோல் இயற்கை எய்திய திரு. கந்தையாபிள்ளை அவர்களது குடும்பத்தினர் அத்தனை பேரது விருப்புமாக இருக்கிறது.

ஈழத் திருநாட்டிலே தமிழ் மகன் ஒருவனால் ஸ்தாபிக்கப் பட்ட இத் தொழிற்சாலையை இத் தொழிற்சாலையில் உற்பத்தி யாகும் சோப்பை நாம் உபயோகிப்பதன் மூலம் சுதேசிய இயக்கத்திற்கு ஆதரவு கொடுக்கிறோம் அல்லவா?

இன்று தமிழ்நாட்டின் பகுதிகளில் மில்க்வைற்சோப் வான்கள் தங்கள் கடமைகளைச் செய்த வண்ணம் இருக்கின்றன. இல்லங்கள் தோறும் மில்க்வைற் சோப் அணி செய்கிறது.

மறைந்திட்ட திரு. கந்தையாபிள்ளை அவர்களுக்கு நாம் செய்யும் தொண்டுதான் என்னே. அவர் கொண்ட கண்ட கனவு களை நனவாக்குவதே' இத்தொழிற்சாலையின் உற்பத்திச் சோப்பை நாம் ஆதரிப்போமாக. தமிழ் பேசும் பெருமக்களாய

நாம் மில்க்வைற் சோப்பின் மகிமை வெளிநாடுகளுக்கும் பரவும் வகை செய்யவேண்டும். தமிழ் நாட்டின் வீதிகளில் மில்க்வைற் சோப் வான்கள் பவனி வரவும், உலக நாடுகளின் துறைமுகங் களிலே மில்க்வைற் சோப் இறக்குமதி செய்யப்படுவதையும் நாம் காணவேண்டும்.

தமிழ்ப் பெரும் குடிகளாய் நாம் மேன்மேலும் சுதேசித் தொழிற்சாலையாம் மில்க்வைற்சோப் தொழிற்சாலையில் உதய மாகும் சோப்புகளை பாவிப்பதாகும் இதனால் நம் பணம் நம் நாட்டிலே இருக்கும் தொழிற்சாலை உயர்ந்தால் நாடு ஏற்ற மடையும். திரு. கந்தையாபிள்ளைக்கு நாம் செய்யும் கடமையும் இதுவே மறைந்த இவரால் நாடு பெருமையடைகிறது. ஒவ்வொரு சோப் கட்டியைப் பாவிப்போரும் திரு.கந்தையாபிள்ளையின் கதையை, வாழ்வை மறக்கமாட்டார்கள்.

**'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நீ**
**வாழிய நிலனே'**

என இவரால் நாடு அடையும் புகழை நாம் கருத்தில் கொண்டு இத்தருணத்தில் அவர் வாழ்வை நினைவு கொள்ளுவோமாக.

**'வாழ்க திரு. கந்தையாபிள்ளை அவர்கள்**
**வாழ்க மில்க்வைற் சோப் தொழிற்சாலை'**

பாரதி பதிப்பகம், 430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.